<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>

<u>முனிலை</u> :- செல்வி.**N.G**.சிந்து, **B.A**., **L.L.B**.,
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாள் திங்கட் கிழமை,

(திருவள்ளுவராண்டு, 2056, குரோதி வருடம், ஆடி திங்கள்
26 ம் நாள் திங்கட் கிழமை)

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.1329/2019
**CNR NO**.:**TNCB**0**A**-000685-2019

<u>அரசுக்காக:-</u>

காவல் ஆய்வாளர்,

துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்,

கோயமுத்தூர்.

(காவல் நிலைய குற்ற எண்.16/2014). ... **புகார்தாரர்**

/எதிர்/

A1. யேசுதாஸ் (34),

த/பெ.யோவான்,

க.எண்.3/3, R.R.காலனி,

N.S.N. பாளையம்,

கோயமுத்தூர்.

A2. யோவான் (55),

க.எண்.3/3, R.R.காலனி,

N.S.N. பாளையம்,

கோயமுத்தூர்.

A3. பிரேமா (50),

க/பெ.யோவான்,

க.எண்.3/3, R.R.காலனி,

N.S.N. பாளையம்,

கோயமுத்தூர்.

A4. எஸ்தர் (எ) பார்வதி (30),
க.எண்.3/3, R.R.காலனி,
N.S.N. பாளையம்,
கோயமுத்தூர்.

A5. சௌந்தர ராஜன் (57),
பெரியார் நகர்,
பாளையங்கோட்டை மருத்துவமனை
ஐகிரவுண்ட் பின்புறம்,
பெரியார் நகர்,
பாளையங்கோட்டை.

A6. சண்முகத்தாய் (52),
க/பெ.சௌந்தரராஜன்,
பெரியார் நகர்,
பாளையங்கோட்டை மருத்துவமனை
ஐகிரவுண்ட் பின்புறம்,
பெரியார் நகர்,
பாளையங்கோட்டை.

A7. உமாமகேஸ்வரி (32),
க/பெ.குமார்,
கோவை. **... எதிரிகள்**

**The Hon'ble High Court of Chennai ROC No**.814/2020 **RG/F**1 **dated** 07.04.2021 (**P.Dis.No**.36/2021) **The summary of the case is as follows**.

| SNo. | **Summary of the case** | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | Accused Remand days | : | Accused's Name | Remand date | Released bail |
| | | | 1. யேசுதாஸ் | 04.06.2014 | 11.06.2014 |
| | | | 2. யோவான் | - | - |
| | | | 3. பிரேமா | - | - |
| | | | 4. எஸ்தர் (எ) பார்வதி | - | - |
| | | | 5. சௌந்தர ராஜன் | - | - |
| | | | 6. சண்முகத்தாய் | - | - |
| | | | 7. உமாமகேஸ்வரி | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ii) | Date of filing of complaint and the final report in the court | : | Date of filing the complaint | | Final report filed in the court | |
| | | | 04.06.2014 | | 18.01.2019 | |
| (iii) | For further investigation to send Session the case to the justice minister ordered date | : | - | | | |
| (iv) | Sec. 228, 240, 248 of Cr.P.C and sec 251 to the accused questions. | : | 05.12.2022 | | | |
| (v) | All miscellaneous petitions and its results. Results against in the Supreme Court capital if it has been done, Results. petition u/s.317 Cr.P.C Except. | : | Miscellaneous Petition number | | Petition date | Conclusion |
| | | | 33981/2019 | | 01.10.2024 | allowed |
| (vi) | Examination of Witnesses and cross - examination date | : | Witnesses name | | Chief examinationdate | Cross examinationdate |
| | | | P.W.1 | அமுதா | 02.01.2023 | 02.01.2023<br>08.04.2025 |
| | | | P.W.2 | லட்சுமி | 19.01.2023 | 17.04.2023 |
| | | | P.W.3 | மணி | 19.01.2023 | 19.01.2023 |
| | | | P.W.4 | சண்முகவள்ளி | 01.02.2023 | 01.02.2023 |
| | | | P.W.5 | இசக்கிமுத்து | 01.02.2023 | 01.02.2023 |
| | | | P.W.6 | திருமதி.அமுதா (காவல் | 06.05.2025 | 06.05.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆய்வாளர்) | | |
| (vii) | U/s.313 of the Cr.P.C accused question date | : | 20.05.2025 | | |
| viii | The accused pleaded guilty / not | : | Pleaded not guilty | | |
| (ix) | In the High Court Stay, if any, Result. | : | - | - | - |
| (x) | charge | : | 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவு 406 இ.த.ச-வின் படி குற்றச்சாட்டு வனையப்பட்டது.<br>1 முதல் 7 எதிரிகள் மீது 498(A) இ.த.ச-வின் படி குற்றச்சாட்டு வனையப்பட்டது. | | |
| (xi) | The accused's response | : | Not guilty. | | |
| (xii) | Judge's decision | : | 1 முதல் 3 எதிரிகள் மீது 406 இ.த.ச-வின் படி குற்றச்சாட்டு வனையப்பட்டது. 1 முதல் 7 எதிரிகள் மீது 498(A) இ.த.ச-வின் படி குற்றச்சாட்டு வனையப்பட்டது. | | |
| xiii | Judgment | : | இ.த.ச. பிரிவுகள் 406, 498(A)-ன் படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. | | |

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106-ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1. | வரிசை எண் | C.C.No.1329 of 2019 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | துடியலூார் அனைத்து மகளிர் காவல் நிலையம் கோவை குற்ற எண்.16/2014. |
| 3. | எதிரியின் பெயர் | A1. யேசுதாஸ், த/பெ.யோவான், க.எண்.3/3, R.R.காலனி, N.S.N. பாளையம், கோயமுத்தூர்.<br>A2. யோவான், க.எண்.3/3, R.R.காலனி, N.S.N. பாளையம், கோயமுத்தூர். |
| 4. | தந்தையாரின் பெயர் | |
| 5 | தொழில் | |
| 6 | குடியிருப்பு | |
| 7 | வயது | |

| | | |
|---|---|---|
| | | A3. பிரேமா, க/பெ.யோவான்,<br>க.எண்.3/3, R.R.காலனி,<br>N.S.N. பாளையம், கோயமுத்துார்.<br>A4. எஸ்தர் (எ) பார்வதி,<br>க.எண்.3/3, R.R.காலனி,<br>N.S.N. பாளையம், கோயமுத்துார்.<br>A5. சௌந்தர ராஜன், பெரியார் நகர்,<br>பாளையங்கோட்டை மருத்துவமனை<br>ஐகிரவுண்ட் பின்புறம், பெரியார் நகர்,<br>பாளையங்கோட்டை.<br>A6. சண்முகத்தாய், க/பெ.சௌந்தரராஜன்,<br>பெரியார் நகர்,<br>பாளையங்கோட்டை மருத்துவமனை<br>ஐகிரவுண்ட் பின்புறம்,<br>பெரியார் நகர், பாளையங்கோட்டை.<br>A7. உமாமகேஸ்வரி, க/பெ.குமார்,<br>கோவை.<br>* எதிரிகளின் வயது : 1. 34/2016<br>2. 55/2016 3. 50/2016 4. 30/2016<br>5. 57/2016 6. 52/2016 7. 32/2016<br>* எதிரிகளின் தொழில்:<br>1 ம் எதிரி - கூலி<br>2 ம் எதிரி - -<br>3 ம் எதிரி - -<br>4 ம் எதிரி - -<br>5 ம் எதிரி - கூலி<br>6 ம் எதிரி - -<br>7 ம் எதிரி - - |
| 8 | சம்பவம் நடந்த தேதி | 04.06.2014 |
| 9 | முறையீடு செய்யப்பட்ட தேதி | 04.06.2014 |

| | | |
|---|---|---|
| 10 | கைது செய்யப்பட்ட தேதி | 1 ம் எதிரி 04.06.2014 |
| 11 | பிணையில் விடுவித்தல் | 1 ம் எதிரி 11.06.2014 |
| 12 | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |
| 13 | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 02.01.2023 |
| 14. | விசாரணை முடிவடைந்த தேதி | 06.05.2025 |
| 15 | தண்டனை அல்லது உத்தரவு | பிரிவு 406, 498(A) இ.த.ச-வின் படி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 16 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்படவில்லை. |
| 17 | காலதாமதத்தின் விளக்கம் | - |

## As per Rule 106 CRP 2019

**<u>Case Summary in CC 1329/2019</u>**

| Sl.No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused/Surrender | 1st accused 04.06.2014 |
| 2. | Date of filing of the Complaint/Final Report in the Court | 18.01.2019 |
| 3. | The date of Commital of the case to the court of session | Not applicable |
| 4. | First Questioning U/S.240 Cr.P.C | 05.12.2022 |
| 5. | Filing of Miscellanious petition 311 Cr.P.C | CMP No.33981/2019 |
| 6. | Date of Examination in chief and Cross examination of witness.<br>PW1 Chief and Cross<br>PW2 Chief and Cross<br>PW3 Chief and Cross<br>PW4 Chief and Cross<br>PW5 Chief and Cross<br>PW6 Chief and Cross | (see below) |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 02.01.2023 | 02.01.2023<br>08.04.2025 |
| PW2 | 19.01.2023 | 17.04.2023 |
| PW3 | 19.01.2023 | 19.01.2023 |
| PW4 | 01.02.2023 | 01.02.2023 |
| PW5 | 01.02.2023 | 01.02.2023 |
| PW6 | 06.05.2025 | 06.05.2025 |

| | | |
|---|---|---|
| 7. | NBW Issued | 13.05.2022 |
| 8. | NBW recalled | 31.05.2022 |
| 9. | Questioning U/s.313(i)(b) of Cr.P.C | 20.05.2025 |
| 10. | Datails of Abscondence of an accused and his appearance/producion | Nil |
| 11. | Grant of stay by superior courts and the result there of | Nil |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 15.07.2019 ம் தேதி அன்று இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 04.08.2025 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.R.சங்கீதா, பி.ஏ., பி.எல்., அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது துடியலூார் அனைத்து மகளிர் காவல் நிலையம் காவல் ஆய்வாளர் அவர்களால் குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் 18.01.2019 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் பிரிவுகள் 498(A), 406 இ.த.ச.-வின் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

2. **<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

நிகழ்நிலை புகார்தாரருக்கும், 1 ம் எதிரியான யேசுதாசுக்கும் கடந்த 03.09.2011 ம் தேதி இரு வீட்டார் முன்னிலையிலும் இந்து முறைப்படி திருமணம் நடந்ததாகவும், 2 ம் எதிரியான நிகழ்நிலை புகார்தாரரின் மாமியார் மற்றும் 3 ம் எதிரியான மாமனார் ஆவார்கள் என்றும், மேலும் 4 ம் எதிரி 1 ம் எதிரியின் அத்தை ஆவார் என்றும், 5 ம் எதிரி 1 ம் எதிரியின் பெரியப்பா ஆவார் என்றும், 6 ம் எதிரி 5 ம் எதிரியின் மனைவி ஆவார் என்றும், 7 ம் எதிரி 4 ம் எதிரியின் மகள் ஆவார் என்றும், திருமணத்திற்கு வாதிக்கு 19 பவுன் நகையும் பணம் ரூ.3 ஆயிரமும் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தும் சீதனமாக தனது பெற்றோர்கள் கொடுத்துள்ளதாகவும், நிகழ்நிலை புகார்தாரரும், 1 ம் எதிரியும் திருமணத்தின் பின்பு 2 மற்றும் 3 எதிரிகளுடன் சேர்ந்து கூட்டு குடும்பமாக க.எண்.3/3 R.R.காலனி N.S.N.பாளையம், கோவை என்ற விலாசத்தில்

குடியிருந்துவந்ததாகவும், சில நாட்களிலேயே நிகழ்நிலை புகார்தாரரிடம் 1ம் எதிரி உன்னுடைய நகைக்காக வேண்டித்தான் உன்னை திருமணம் செய்து கொண்டேன் என்றும், இல்லையென்றால் 7ம் எதிரியைத்தான் திருமணம் செய்திருப்பேன் என்று 1ம் எதிரி நிகழ்நிலை புகார்தாரரிடம் அடிக்கடி கூறி நிகழ்நிலை புகார்தாரருக்கு மன உளைச்சல் ஏற்படுத்தி வந்ததாகவும், 2 மற்றும் 3 எதிரிகள் சேர்ந்து நிகழ்நிலை புகார்தாரரை இந்த விஷயத்தை பற்றி சொல்லி நிகழ்நிலை புகார்தாரரிடம் **''கணவர் சொல்படி நட''** என்று கூறி 1ம் எதிரிக்கு சாதகமாக பேசியுள்ளதாகவும், மேலும் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் சேர்ந்து நிகழ்நிலை புகார்தாரரிடம் ஒரு ஓட்டு வீடு ஒன்று விலைக்கு வருகிறது, அதை வாங்க பணம் தேவைப்படுவதாகவும், அதற்கு நிகழ்நிலை புகார்தாரரின் 19 பவுன் நகைகளை கேட்டு நிகழ்நிலை புகார்தாரரிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும், மேலும் அதை திருப்பி தராமல் இருந்து வந்துள்ளதாகவும், மேலும் 4 மற்றும் 7 எதிரிகளின் தூண்டுதலின் படியும் 1ம் எதிரியானவர் நிகழ்நிலை புகார்தாரரிடம் தான் 7ம் எதிரியை திருமணம் செய்து கொள்ள போவதாகவும், நிகழ்நிலை புகார்தாரரை வீட்டை விட்டு செல்லும் படியும், தினமும் நிகழ்நிலை புகார்தாரரை அடித்து துன்புறுத்தி வந்ததாகவும், மேலும் நிகழ்நிலை புகார்தாரருக்கு உடலுளைச்சல் ஏற்படுத்தி வந்துள்ளதாகவும், அவ்வபோது நிகழ்நிலை புகார்தாரரின் கணவரிடம், 5 மற்றும் 6 எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரர் உனக்கு ஒத்து போகவில்லை என்றால் விவாகரத்து கொடுத்துவிட்டு செல் என்று கூறி 1ம் எதிரிக்கு நிகழ்நிலை புகார்தாரரை பற்றி சொல்லி கொடுத்து தூண்டிவிட்டதாகவும், எனவே நிகழ்நிலை புகார்தாரர் மேலும் அதிக மன உளைச்சலுக்கு ஆளாகியதாகவும், மேற்படி அனைத்து துன்பத்தையும் தாங்கி நிகழ்நிலை புகார்தாரர் கணவருடன் 1 3/4 வயதான குழந்தை வைத்து கொண்டு வாழ்ந்து வந்ததாகவும், 1ம் எதிரி **"குழந்தைக்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை"** என்று கூறி நிகழ்நிலை புகார்தாரருடன் வாழாமல் இருந்து வந்ததாகவும், எனவே அவர்களின் செயல் தனக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியதால் நிகழ்நிலை புகார்தாரர் துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதைப்பெற்றுக்கொண்டு சட்டப்பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் கீழ் துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் குற்ற எண்.16/2014 எண்ணில் 04.06.2014-ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 498(A), மற்றும் 406ன் படியும், 4 முதல் 7 எதிரிகள் மீது 498(A) இ.த.ச-வின் கீழ் துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 18.01.2019-ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1329/2019 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 15.07.2019-ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207 பிரிவின் படி 01.12.2022-ம் தேதி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**4.** எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகளின் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 05.12.2022-ம் தேதியன்று எதிரிகளிடம் இ.த.ச. பிரிவு 498(A), 406-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்டும், இ.த.ச. பிரிவு 498(A), 406-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போதும், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**5.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்-பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :</u>**

**(i). அ.சா.1 பாதிக்கப்பட்ட நபரான அமுதா தனது சாட்சியத்தில்** அ.சா.1 க்கும், 1 ம் எதிரிக்கும் 03.06.2016 ம் தேதியன்று நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்சில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது சீதனமாக 19 பவுன் நகையும், சீர்வரிசை பாத்திரங்களும், ரூ.30 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டதாகவும், மேலும் 1 ம் எதிரி அ.சா.1 ஐ பிடிக்கவில்லை என்றும், 1 ம் எதிரியின் பெற்றோரின் வற்புறுத்தலால் தான் அ.சா.1 ஐ திருமணம் செய்து கொண்டதாகவும், 1 ம் எதிரிக்கு இரவு நேரத்தில் தமிழ்செல்வி என்ற பெண் அடிக்கடி போன் செய்வார் என்றும், இதைப்பற்றி அ.சா.1 கேட்ட போது 1 ம் எதிரி அ.சா.1 ன் காதில் அடித்ததால் ரத்தம் வந்ததாகவும், அறுவை சிகிச்சை செய்த பிறகும், அ.சா.1 க்கு காது கேட்சவில்லை என்றும், 1 ம் எதிரி அ.சா.1 டன் சேர்ந்து வாழ

வேண்டுமென்றால் அ.சா.1 ன் பெற்றோரிடமிருந்து நகை மற்றும் பணம் வாங்கி வரவேண்டுமென்று துன்புறுத்தியதாகவும், அ.சா.1 க்கு குழந்தை பிறந்த போது குழந்தையை பார்க்க 1 ம் எதிரி ஒரு முறைத்தான் வந்தார் என்றும், அதற்கு பின்பு வரவில்லை என்றும், அதனால் 03.12.2013 அன்று ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதே சமயத்தில் 1 ம் எதிரி அ.சா.1 டமிருந்து விவாகரத்து பெறாமல் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதனால் இந்த வழக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**(ii) அ.சா.2 லட்சுமி தனது சாட்சியத்தில்** அ.சா.1 தனது மகள் என்றும் அ.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் 03.06.2016 ம் தேதியன்று நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்சில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது சீதனமாக 19 பவுன் நகையும், சீர்வரிசை பாத்திரங்களும், ரூ.30 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டதாகவும், மேலும் 1 ம் எதிரி அ.சா.1 ஐ கையிலும், காலிலும், தொடையிலும் தாக்கியதால் அ.சா.1 ஆல் நடக்க முடியாமல் இருந்ததால் அவர் அதற்காக சிகிச்சை பெற்றதாகவும், 1 ம் எதிரி அ.சா.1 டன் வாழ மறுக்கிறார் என்றும், அ.சா.1 க்கு பிறந்த குழந்தையை 1 ம் எதிரிக்கு பிறக்க வில்லை என்று கொடுமைப்படுத்தியதாக அ.சா.1 சொல்லி கேள்வி பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**(iii). அ.சா.3 மணி தனது சாட்சியத்தில்** அ.சா.1 அவரது பக்கத்து வீட்டில் குடியிருந்து வருவதாகவும், அ.சா.1 கும் 1 ம் எதிரிக்கும் 03.06.2016 ம் தேதியன்று நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்சில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது சீதனமாக 19 பவுன் நகையும், சீர்வரிசை பாத்திரங்களும், ரூ.30 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டதாகவும், திருமணத்தின் போது அவர் உடனிருந்ததாகவும், அ.சா.1 ற்கு குழந்தை பிறந்த போது 1 ம் எதிரி குழந்தையை பார்க்க வரவில்லை என்றும், அதைப்பற்றி கேட்ட போது அ.சா.1, 1 ம் எதிரி அவரை திருமணத்திற்கு பின்பு அடித்து கொடுமைப்-படுத்தியதாகவும், 1 ம் எதிரி அடித்ததால் அ.சா.1 க்கு காது கேட்காமல் போய் விட்டதாக சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(iv). அ.சா.4 சண்முகவள்ளி** தனது சாட்சியத்தில் அ.சா.1 அவரது தங்கை என்றும், அ.சா.1 கும் 1 ம் எதிரிக்கும் 03.06.2016 ம் தேதியன்று நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்சில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது சீதனமாக 19 பவுன்

நகையும், சீர்வரிசை பாத்திரங்களும், ரூ.30 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டதாகவும் திருமணத்திற்கு பிறகு 1 ம் எதிரி வேறொரு பெண்ணுடன் போனில் பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதைப்பற்றி கேட்ட போது அ.சா.1 ஐ 1 ம் எதிரி அடித்ததால் அ.சா.1 க்கு காது கேட்காமல் போய் விட்டதாகவும், அ.சா.1 க்கு குழந்தை பிறந்த போது அவரை பார்க்க எதிரிகள் யாரும் வரவில்லை என்றும், மேலும் திருமணத்தின் போது அ.சா.1 க்கு போட்ட நகைகளை எதிரிகள் திரும்பத்தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(v). அ.சா.5 இசக்கிமுத்து தனது சாட்சியத்தில்** அ.சா.1 தனது தங்கை என்றும் அ.சா.1 க்கும், 1 ம் எதிரிக்கும் 03.06.2016 ம் தேதியன்று நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்சில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது சீதனமாக 19 பவுன் நகையும், சீர்வரிசை பாத்திரங்களும், ரூ.30 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டதாகவும், திருமணத்திற்கு பிறகு 1 ம் எதிரி வேறொரு பெண்ணுடன் போனில் பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதைப்பற்றி கேட்ட போது அ.சா.1 ஐ 1 ம் எதிரி அடித்ததால் அ.சா.1 க்கு காது கேட்காமல் போய் விட்டதாகவும், அ.சா.1 க்கு குழந்தை பிறந்த போது அவரை பார்க்க எதிரிகள் யாரும் வரவில்லை என்றும், மேலும் திருமணத்தின் போது அ.சா.1 க்கு போட்ட நகைகளை எதிரிகள் திரும்பத்தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(vi). அ.சா.6 திருமதி.அமுதா (காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி) தனது சாட்சியத்தில்** கடந்த 04.06.2014 ம் தேதியன்று திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து எல்லை நிமித்தம் காரணமாக பெறப்பட்ட அக்காவல் நிலைய குற்ற எண்.70/2013 சட்டப்பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பெற்று துடியலூர், அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.16/2014 சட்டப்பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேலும் அன்றைய தினமே சாட்சிகள் அமுதா, லட்சுமி, சண்முகவள்ளி மற்றும் இசக்கிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரியவந்ததால் 1 ம் எதிரியை அன்றைய தினமே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், மேலும் 05.06.2014 ம் தேதியன்று சாட்சி மணிகண்டன், ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையம் பெண் தலைமை காவலர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம்

பதிவு செய்ததாகவும், மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் கீழ் 06.08.2014 ம் தேதியன்று இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 20.05.2025-ம் தேதி வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தனங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

8. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:</u>

எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 498(A), 406-ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்-சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டதாகவும் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும் அரசு தரப்பு வாதத்தினை முன் வைத்துள்ளார். மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் 1 முதல் 7 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க அரசு தரப்பில் போதுமான சாட்சியங்கள் அளிக்கப்பட-வில்லை என்றும், மேலும் இந்த வழக்கில் அ.சா.1 மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு விசாரணை செய்த போது அவர் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார் என்றும் எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் 1 முதல் 7 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் ஆகவில்லை என்றும், எனவே அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

10. இந்த வழக்கை பொறுத்தவரையில் அ.சா.1 தான் முதன்மையான சாட்சி ஆவார். இந்த வழக்கில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் தான் புகாரில் கொடுத்துள்ள சங்கதிகளை சாட்சியமாக அளித்துவிட்டு, பிறகு 08.04.2025 அன்று மனுவின் பேரில்

அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அ.சா.1 ம் எதிரிகளும் இந்த வழக்கில் சமரசம் பேசிக்கொண்டு இந்த வழக்கை முடிக்க ஒப்புக்-கொண்டதாகவும், அவர்களுக்கிடையே ஏற்பட்ட சமரசத்தின் தீர்வாக அ.சா.1 ன் பெயரிலும், அ.சா.1 ன் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.4 லட்சம் எதிரிகள் வைப்பீட்டு தொகையாக அஞ்சல் அலுவலகத்தில் ஒரு சேமிப்பு கணக்கை தொடங்கி அதில் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்தப்பட்டதாகவும், மேலும் அவர்களுக்கிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டபடியால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்ய எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.1 தனது முதல் விசாரணையில் அ.சா.1 க்கு 19 பவுன் நகை, சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும் ரூ.30 ஆயிரம் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும் நகைகள் மற்றும் ரொக்கம் அ.சா.1 ன் பெற்றோர்கள் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1 ன் பெற்றோர்-களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள நகை மற்றும் ரொக்கத்தை கொடுக்கும் அளவிற்கு வசதி இருந்ததா என்பது பற்றியும் நிரூபிக்கப்படவில்லை.

12. மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணையில் 1 ம் எதிரி தமிழ்செல்வி என்ற பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணமோ அல்லது சாட்சியையோ இந்த நீதிமன்றத்தின் முன் சமர்பிக்கவில்லை. வெறும் வாய்மொழியான சாட்சியத்தை மட்டுமே வைத்து 1 ம் எதிரி வேறொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருப்பதாக சாட்சியம் அளித்துள்ளது நீதிமன்றத்திற்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்தவில்லை. மேலும் ஒரு ஆண் நபர் ஒரு பெண்ணுடன் பேசினார் என்பது ஒரு குற்றச்செயல் ஆகாது. மேலும் 1 ம் எதிரி அ.சா.1 ஐ அடித்ததால் அவருக்கு காதில் ரத்தம் வந்து அதற்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகும் காது கேட்காமல் போய்விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவர் சிகிச்சை பெற்றுக்கொண்டதை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தின் முன் சமர்பிக்காததால் அ.சா.1 ன் சாட்சியம் நம்பதகுந்த சாட்சியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**13.** மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணையில் 1ம் எதிரி அ.சா.1 டமிருந்து விவாகரத்து பெறாமலேயே வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் வகையில் போதுமான ஆதாரங்கள் எதையும் இந்த நீதிமன்றத்தின் முன் சமர்பிக்கவில்லை. மேலும் எந்த பெண்ணை எந்த இடத்தில் யார் முன்னிலையில் 1-ம் எதிரி திருமணம் செய்து கொண்டார் என்ற விபரத்தையும் அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் அ.சா.1 மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அ.சா.1 ம் எதிரிகளும் இந்த வழக்கில் சமரசம் பேசிக்கொண்டு இந்த வழக்கை முடிக்க ஒப்புக்-கொண்டதாகவும், அவர்களுக்கிடையே ஏற்பட்ட சமரசத்தின் தீர்வாக அ.சா.1 ன் பெயரிலும், அ.சா.1 ன் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.4 லட்சம் எதிரிகள் வைப்பீட்டு தொகையாக அஞ்சல் அலுவலகத்தில் ஒரு சேமிப்பு கணக்கை தொடங்கி அதில் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்தப்பட்டதாகவும், மேலும் அவர்களுக்கிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டபடியால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்ய எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையின் போது ஒரு வாரத்திற்கு தனக்கு ரூ.200 கூலியாக கிடைக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் சொத்துக்களை விற்ற பணம் மூலமாகவும் மற்றும் அவரது சம்பாத்தியத்தை வைத்துதான் நகை மற்றும் பணம் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எந்த சொத்தை விற்று பணம் பெற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியத்தை கருதும் போது அ.சா.1 ன் பெற்றோருக்கு மேற்குறிப்பிட்டுள்ளது போல நகை மற்றும் பணம் கொடுக்க போதுமான வசதி இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகை ரசீதுகள் வெவ்வேறு வருடங்களில் வாங்கப்பட்டவை ஆகும்.

**15.** மேலும் இந்த வழக்கில் அ.சா.1 ஐ தவிர ஆ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் காதுற்ற சாட்சிகள் ஆவார்கள். அவர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் 1ம் எதிரி 2வது திருமணம் செய்து கொண்டது குறித்து அவர்கள் யாரும் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

16. எனவே அ.சா.6ன் சாட்சியத்தை பொறுத்து மட்டுமே இவ்வழக்கில் எதிரிகள் குற்றவாளிகள் என்று தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கில் 1 முதல் 7 எதிரிகள் அ.சா.1 டம் வரதட்சணை கேட்ட குற்றத்திற்காக 1 முதல் 7 எதிரிகளுக்கு எதிராக பிரிவு 498(A) இ.த.ச-வின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

<u>பிரிவு 498(**A**)இ.த.ச-வின் படி பெண்ணொருவரின் கணவர் அல்லது கணவரின் உறவினர் அவளைக் கொடுமையிழைப்புக்கு உட்படுத்துதல்:</u>

**பெண்ணொருவரின் கணவர் அல்லது கணவரின் உறவினர், அவளைக் கொடுமையிழைப்புக்கு உட்படுத்தினால், அத்தகைய குற்றம் செய்தவர் மூன்றாண்டுகள் வரையில் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார், மற்றும் அவரை அபராதத்திற்கு உட்படுத்தவும் செய்யலாம்.**

இந்த பிரிவின் படி ஒரு நபரை குற்றவாளி என்று கருத அந்த நபர் பாதிக்கப்பட்ட பெண்ணை உடலளவிலோ, மனதளவிலோ காயம் ஏற்படுத்தியோ தற்கொலை செய்து கொள்ள முடிவு எடுக்கும் நிலைக்கு தள்ளி இருக்கவேண்டும், அல்லது மேலும் அவர் வரதட்சணை அவரிடமோ அல்லது உறவினர்களிடமோ கேட்டு அவரை கொடுமை அல்லது தொல்லை செய்திருக்க வேண்டும்.

17. மேலும் இந்த வழக்கை பொறுத்தவரையில் 1 முதல் 7 எதிரிகளின் மீது பிரிவு 498(A) இ.த.ச-வின் கீழ் குற்றவாளி என கருத அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்திலோ அல்லது தனது குறுக்கு விசாரணையிலோ 1ம் எதிரி அ.சா.1 இடமோ அல்லது அவரது உறவினர்களிடமோ எந்த தேதியில், எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் எந்த பொருட்களை வரதட்சணையாக கேட்டார் என்பது பற்றி அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர் பொதுவாக எதிரிகள் பணம் மற்றும் நகை கொடுத்தால் மட்டுமே 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ முடியும் என்று 1ம் எதிரி சொல்லியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. ஒருவர் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை நிரூபிக்க வேண்டுமானால் சாட்சி தனது சாட்சியத்தில் குற்றத்தைப்பற்றி குறிப்பிட்டு சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கை பொறுத்தவரையில் அவ்வாறு குறிப்பிட்டு எந்த ஒரு குற்றச்சாட்டும் குறிப்பிடப்-படவில்லை. எனவே அரசு தரப்பு சாட்சிகளை கருதும் போது அ.சா.1 கோரியுள்ள படி

சீர்வரிசைகள் உண்மையிலேயே கொடுக்கப்பட்டதா என்ற சந்தேகமும் 1ம் எதிரி, அ.சா.1 ஐ அடித்ததால் தான் அவருக்கு காது கேட்காமல் போய்விட்டது என்பது பற்றியும் அரசு தரப்பில் சந்தேகமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1 முதல் 7 எதிரிகள் மீது பிரிவு 498(A) இ.த.ச-வின் படி குற்றவாளி என்று நிரூபிக்க அரசுத்தரப்பு போதுமான சாட்சியங்களை அளிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**19.** இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1ன் நகைகளை வாங்கி வைத்துக்கொண்டு திருப்பிக்கொடுக்காமல் நம்பிக்கை மோசடி செய்த குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக பிரிவு 406 இ.த.ச-வின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**சட்டப் பிரிவு 406 இ.த.ச பிரிவு குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்திற்குத் தண்டனை:**

**குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்கிற ஒருவர் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.**

**20.** பிரிவு 406 இ.த.ச-வின் கீழ் ஒருவரை குற்றவாளி என்று கருத வேண்டுமானால் சொத்து அல்லது சொத்து மீதான எந்தவொரு ஆதிக்கத்தையும் ஒப்படைக்கப்பட்ட எவரும், அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையகப்-படுத்துகிறார் அல்லது தனது சொந்த பயன்பாட்டிற்கு மாற்றுகிறார் அல்லது அந்த நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டிய முறையை பரிந்துரைக்கும் எந்தவொரு சட்டத்தின் திசையையும் அல்லது அத்தகைய நம்பிக்கையை நிறைவேற்றுவது தொடர்பாக அவர் செய்த வெளிப்படையான அல்லது மறைமுகமான எந்தவொரு சட்ட ஒப்பந்தத்தையும் மீறி அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் பயன்படுத்துகிறார் அல்லது அப்புறப்-படுத்துகிறார் அல்லது வேறு எந்த நபரையும் அவ்வாறு செய்ய வேண்டுமென்றே அனுமதித்தால் அவர் "குற்றவியல் நம்பிக்கை மீறல் செய்கிறார்". ஆனால் இந்த வழக்கை பொறுத்த வரையில் எந்த ஒரு அரசு தரப்பு சாட்சியும் எதிரிகள் பணத்தையும், நகையையும் 1 முதல் 3 எதிரிகள் பெற்றுக்கொண்டு அந்த பொருட்களை அவர் நேர்மையற்ற முறையில்

கையகப்படுத்தியதாக எந்த ஒரு சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே பிரிவு 406 இ.த.ச-வின் கீழ் எதிரிகளை குற்றவாளி என கருத அரசு தரப்பு போதுமான சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**21.** மேலும், இந்த வழக்கின் முதன்மை சாட்சியான அ.சா.1 ஐ மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த போது அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள படியால் அரசு தரப்பு குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 ன் சாட்சியம் அமையவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.1 முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருதுகையில் அ.சா.1 அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**22.** அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 1 முதல் 7 எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்வதே நீதியின் பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் படி அரசு தப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் இறுதியாக முடிவு செய்கிறது.

**23.** முடிவில், 1 முதல் 7 எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 406 இ.த.ச-வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி தீர்மானித்து, அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

**24.** வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாள் திங்கட் கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-N.G.சிந்து,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**அட்டவணை :**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|
| அ.சா.1 | அமுதா | 02.01.2023 | 02.01.2023<br>08.04.2025 |
| அ.சா.2 | லட்சுமி | 19.01.2023 | 17.04.2023 |
| அ.சா.3 | மணி | 19.01.2023 | 19.01.2023 |
| அ.சா.4 | சண்முகவள்ளி | 01.02.2023 | 01.02.2023 |
| அ.சா.5 | இசக்கிமுத்து | 01.02.2023 | 01.02.2023 |
| அ.சா.6 | திருமதி.அமுதா (காவல் ஆய்வாளர்) | 06.05.2025 | 06.05.2025 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

அ.சா.ஆ.1 - புகார்

அ.சா.ஆ.2 - 26.04.2008 ம் தேதியிட்ட திருநெல்வேலி ஆலுக்காஸ் நகைக்கடையின் பில்.

அ.சா.ஆ.3 - 04.09.2005 ம் தேதியிட்ட ஆலங்குளம் ஈ.சி.எண்.நகை கடையில் கொடுக்கப்பட்ட ரசீது.

அ.சா.ஆ.4 - 10.08.2010 ம் தேதியிட்ட திருநெல்வேலி கோடீஸ்வரன் ஜீவல்லரியில் கொடுக்கப்பட்ட பில்.

அ.சா.ஆ.5 - 12.10.2010 ம் தேதியிட்ட திருநெல்வேலி சாரா ஜீவல்லர்ஸ் நகைகடையில் கொடுக்கப்பட்ட பில்.

அ.சா.ஆ.6 - ஆலங்குளம் ஈ.சி.என் நகைக்கடையில் கொடுக்கப்பட்ட ரசீது.

அ.சா.ஆ.7 - 30.05.2011 தேதியிட்ட திருநெல்வேலி ஜாய் ஆலுகாஸ் நகைகடையில் கொடுக்கப்பட்ட ரசீது.

அ.சா.ஆ.8 - 0.08.2011 தேதியிட்ட தூத்துக்குடி அழகர் நகைகடையின் ரசீது.

அ.சா.ஆ.9 - 30.05.2011 தேதியிட்ட திருநெல்வேலி ஜி.டி.எம் நகைகடையில் கொடுக்கப்பட்ட பில்.

அ.சா.ஆ.10 - வில்லங்க சான்றிதழ் கணினி நகல்.

அ.சா.ஆ.11 - முதல் தகவல் அறிக்கை.

**அரசு தரப்பு சான்று பொருள்** : இல்லை
**எதிரிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** :

எ.சா.ஆ.1 - கிஷான் விசாஷ் பத்திரா என்ற சேமிப்பு திட்டத்தில் எதிரியால் தொடங்கப்பட்டு வைப்பீட்டு தொகையை எதிரியால் செலுத்தப்பட்ட விபரம்.

எ.சா.ஆ.2 - எ.சா.ஆ.1 ல் வைப்பீடு செய்த தொகை 2034 ம் ஆண்டு ரூ.8 லட்சமாக முதிர்வடைவதற்கான சேமிப்பு கணக்கின் விபரங்கள்.

எ.சா.ஆ.3 - சமரச உடன்படிக்கையின் அசல்.

பின்குறிப்பு :

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

ஒம்/-N.G.சிந்து,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்துார்.